செய்தி வெளியீடு எண்.46/2018 நாள்: 07.09.2018

## <u>மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை தயார்படுத்தி வைக்க</u>

## <u>சென்னைக்குடிநீர் வாரியம் வேண்டுகோள்</u>

மழைநீர் சேகரிப்புத் திட்டம், இந்தியாவிலேயே முன்னோடி திட்டமாக தமிழகத்தில் செயல்படுத்தபட்டு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இத்தகைய திட்டத்தை நடைமுறைப்படுத்திய முதல் மாநிலமாக தமிழகத்தை உருவாக்கியுள்ளது.

2003–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின் மூலம், எல்லாக் கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புக்களை ஆகஸ்ட் 2003–ஆம் ஆண்டுக்குள் ஏற்படுத்துவதற்கு கட்டாயமாக்கப்பட்டது. சென்னைக்குடிநீர் வாரியம் புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகளைப் பெறுவதற்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புக்களை ஏற்படுத்துவதை கட்டாயமாக்கியுள்ளது.

சென்னைக்குடிநீர் வாரியம், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்துவது மற்றும் பராமரித்தல் பற்றிய விழிப்புணர்வை சென்னை மாநகர மக்களிடையே ஆண்டு தோறும் பருவமழைக்கு முன்பாக ஏற்படுத்தி வருகிறது.

சென்னைக் குடிநீர் வாரியம், தேர்ந்தெடுக்கப்பட்ட 145 கண்காணிப்பு கிணறுகளில், நிலத்தடி நீரின் அளவு மற்றும் நீரின் தரத்தைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இதன் மூலம் நிலத்தடி நீரின் அளவும் தரமும் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இத்தகைய பயனைத் தொடர்ந்து பெற ஏதுவாக, பொதுமக்கள் தங்கள் வீடுகளில் உள்ள மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை, வடகிழக்குப் பருவமழை வருவதற்கு முன்பாக நன்குப் பராமரித்து வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தங்கள் வீடுகளிலுள்ள வடிகட்டும் தொட்டிகளில் நிரப்பியுள்ள மணல் / கூழாங்கல் / கருங்கல் ஆகியவற்றை வெளியே எடுத்து, அவற்றை நீரால் சுத்தம் செய்த பின்பு, மீண்டும் தொட்டியின் அடியில் கருங்கல், நடுவில் கூழாங்கல்

மற்றும் எல்லாவற்றிற்கும் மேலே மணல் என்ற முறைப்படி நிரப்ப வேண்டும். மேலும் கட்டடங்களில் உள்ள மழைநீர்க் குழாய்களில் ஏதேனும் ஓட்டை / விரிசல் அல்லது அடைப்புகள் இருந்தால் அவற்றைச் சரி செய்து மழைநீர் வீணாகாமல் முழுவதும் பூமிக்குள் செல்வதை உறுதி செய்ய வேண்டும்.

மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை அமைத்தல் மற்றும் பராமரிப்பதில் பொதுமக்களுக்கு ஏதேனும் விளக்கம் தேவைப்பட்டால், சம்பந்தப்பட்ட பகுதி மற்றும் பிரிவு அலுவலகங்களை அணுகி ஆலோசனை பெற்றுப் பயன் பெறலாம். சென்னைக் குடிநீர் வாரியத்தின் அலுவலர்கள் பொதுமக்களின் வீடுகள் / கட்டடங்களில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை ஆய்வு செய்வார்கள். நிலத்தடி நீர் மட்டம் உயர்வதுடன் அதன் தரமும் மேம்பாடு அடைந்து பயன் பெற பொதுமக்கள் தங்கள் வீடுகளிலுள்ள மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை நன்கு பராமரிக்குமாறு சென்னைக் குடிநீர் வாரியம் கேட்டுக் கொள்கிறது.

இது தவிர, சென்னை குடிநீர் வாரியம் மழைநீர் சேகரிப்பு பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி எதிர்வரும் வடகிழக்குபருவமழையின் மூலம் ஏற்படும் அதிகபட்ச நன்மைகளை பெறுவதற்கு 2018 ஆம் ஆண்டிற்கான கீழ்கண்ட மழைநீர் சேகரிப்பு திட்டங்களை மேற்கொள்ள உள்ளது.

1. சென்னையில்உள்ளஅனைத்துஅரசாங்ககட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் உடனடியாக பணிகளை மேற்கொள்வது குறித்து அந்தந்த துறைதலைவர்களுக்கு தனிப்பட்ட கடிதங்கள்அனுப்புதல்.
2. சென்னை நகரில் தனி வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், வியாபார நிறுவனங்கள், கல்வி வளாகங்கள் மற்றும் சென்னைகுடிநீர் வாரிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் சரியான முறையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதா என்று சரிபார்த்து தேவையானஆலோசனைகளை வழங்கிட பராமரிப்பு பணிகள் பற்றிய சுவரொட்டிகள் வழங்குதல்.

3. சென்னை குடிநீர் வாரியத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதி அலுவலகங்களிலும் பள்ளி மாணவ மாணவிகளை கொண்டு விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல்.

4. சென்னை குடிநீர் வாரிய அலுவலக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மழைநீர் சேகரிப்பின் பராமரிப்பு குறித்த பிரச்சார ஊர்திகள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

5. பள்ளி மாணவ மாணவியர்களை கொண்டு சென்னைகுடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் மழைநீர் சேகரிப்பின் அவசியம் பற்றிய கட்டுரை / கவிதை / ரங்கோலி மற்றும் சுவர் ஓவியப் போட்டிகள் நடத்தப் பெற்று பரிசுகள் வழங்குதல்.

6. சென்னை குடிநீர் வாரிய அலுவலக பணியாளர்களை கொண்டு விழிப்புணர்வு பேரணி மெரினா கடற்கரை சாலையில் நடத்துதல்.

7. மழைநீர் சேகரிப்பு முறைகள் மற்றும் பராமரிப்புன் அவசியத்தை வலியுறுத்தி விளம்பரங்கள் மற்றும் மின்னனு / செய்தி ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல். இதுதவிர மழைநீர் சேகரிப்பு பராமரித்தல் அவசியம் பற்றிய ஒரு குறும்படம் தயாரித்து பள்ளி / கல்லூரி வளாகங்கள் மற்றும் வலையொளி மூலம் விளம்பரபடுத்துதல் மேலும், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் தங்களது வீடுகளில் உள்ள மழைநீர் சேகரிப்பு

அமைப்புகளை பராமரிப்பதை குறும்படம் / புகைப்படமாக எடுத்து, அதை **“மெட்ரோவாட்டர்”** என்ற முகநூல் பக்கத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். அப்படி செய்பவர்கள் அனைவருக்கும் ”**RWH Champion**”” என்ற பேட்ஜ் வழங்கப்படும். பதிவேற்றம் செய்தவர்கள் தங்கள் சென்னைக் குடிநீர் வாரிய பகுதி அலுவலக பொறியாளர்களிடம் பேட்ஜை பெற்றுக் கொள்ளலாம். மேலும், சிறந்த பதிவுகள் தேர்வு செய்யப்பட்டு, பரிசுகள் வழங்கப்படும்.

மேலும் இது குறித்த விவரங்கள் அறிய தலைமை அலுவலகத்திலுள்ள மழைநீர் சேகரிப்புப் பிரிவின் தொலைபேசி எண்: 28454080 அல்லது www.chennaimetrowater.tn.nic.in என்ற இணையதள முகவரியைத் தொடர்பு கொள்ள பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்